**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ASSISTANT SESSION'S JUDGE , SIVAGANGAI**

| | | |
|---|---|---|
| Case Number | : | S.C.No. 113/2021 |
| Deposition Of Witness for | : | PW 2 |
| Name | : | **திரு. காளிதாஸ்** |
| Father Name | : | திரு. வைரவசுந்தரம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **16th August 2024**

(எதிரி ஆஜர். It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u> :

நான் திருப்பத்தூர் இசைவேலாளர் தெருவில் வசித்து வருகிறேன். நான் பெயிண்டிங் தொழில் செய்து வருகிறேன். பாண்டி செல்வி எனது மனைவி. எனக்கு பாண்டியராஜன் , பிரதீப் என்ற இரு மகன்கள் உள்ளனர். ஆஜர் எதிரி பெயர் முத்துமணி ஆகும். என் மனைவி பாண்டிசெல்விக்கும் ஆஜர் எதிரிக்கும் சம்பவத்திற்கு முன்பு இரு வருடங்களாக பழக்கம் இருந்துள்ளது. கடந்த 3 முக்கால் வருடங்களுக்கு முன்பாக எதிரிக்கும் என் மனைவிக்கும் இருந்த பழக்கம் எனக்கு முன்பு தெரியாது சம்பவதன்று பிள்ளையார்பட்டி கோவிலுக்கு நானும் என் மனைவியும் சென்றோம். நாங்கள் சென்ற விபரம் அறிந்து எதிரி என் மனைவிக்கு போன் செய்து கொண்டே இருந்தான், நான் போனை சுவிட் ஆப் செய்து விட்டேன். பிறகு நாங்கள் இரவு 7.30 மணிக்கு வீட்டிற்கு வந்தோம் எனது பெயிண்ட வேலை விசயமாக வெளியில் சென்று விட்டு 20 நிமிடம் கழித்து வந்தேன் . அப்போது என் மனைவிக்கும் எதிரிக்கும் வாக்கு வாதம் நடந்தது என் மனைவியை எதிரி அடிக்க போகும் போது நான் தடுத்தேன். எதிரியும் நீ உயிரோடு இருப்பது எனக்கு தொந்தரவாக உள்ளது உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி விறகு கட்டையால் எனது உச்சந்தலையில் அடித்தார். ரத்தம் அதிகம் சென்றதால் என்னை என் மனைவி திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள்.

பின்பு மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் விறகு கட்டையால் தான் எதிரி ஓங்கி அடித்தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**: இல்லை

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2024.08.16 19:03:20 +0530